2020

වාර්ෂික වාර්තාව
வருடாந்த அறிக்கை
ANNUAL REPORT



පුරාවිද්‍යා පශ්චාත් උපාධි ආයතනය
කැලණිය විශ්වවිද්‍යාලය

தொல்பாருளியல் பட்டப்பின்படிப்பு நிறுவகம்
களனிப் பல்கலைக்கழகம்

Postgraduate Institute of Archaeology
University of Kelaniya



පුරාවිද්‍යා පශ්චාත් උපාධි ආයතනය
කැලණිය විශ්වවිද්‍යාලය

தொல்பாருளியல் பட்டப்பின்படிப்பு நிறுவகம்
களனிப் பல்கலைக்கழகம


Postgraduate Institute of Archaeology
University of Kelaniya

වාර්ෂික වාර්තාව **2020**
வருடாந்த அறிக்கை 2020
ANNUAL REPORT 2020

වාර්ෂික වාර්තාව 2020 4-100

வருடாந்த அறிக்கை 2020 101-213

ANNUAL REPORT 2020 214-311



தொல்பொருளியல் பட்டப்பின்படிப்பு நிறுவகம்

களனிப் பல்கலைக்கழகம்

வருடாந்த அறிக்கை 2020

தொல்பொருளியல் பட்டப்பின்படிப்பு நிறுவகம்
களனிப் பல்கலைக்கழகம்
இல.407, பௌத்தாலோக்க மாவத்தை,
கொழும்பு 07.

சுருக்கக் குறியீடு

PGIAR	Postgraduate Institute of Archaeology
ICOMOS	International Council on Monuments and Sites
ICCROM	International Centre for the Study of the Preservation and Restoration of Cultural Property
SLQF	Sri Lanka Qualification Framework
PG. Dip	Postgraduate Diploma
MA	Master of Arts
MSc.	Master of Science
MPhil	Master of Philosophy
PhD	Doctor of Philosophy
ICT	Information and Communication Technology
LCMA	Laboratory for Cultural Material Analysis
LED	Light-Emitting Diode.
NGO	Non-Governmental Organization
UMO	Upper Ma Oya
BC	Before Christ
AD	Anno Domini
YOMB	Yan Oya Middle Basin Mortuary Archaeology Research Project
UK	United Kingdom
CCF	Central Cultural Fund
SEDRIC	Social Ecological Dynamic in Rapid Economic Development
USA	United States of America
ISSN	International Standard Serial Number
NIE	National Institute of Education
OPA	Organization of Professional Association
SEN	Sendalpaliyan in Chennai
HABCOM	Human and Biosphere Commission
INQUA	International Quaternary Union
FSPI	French Sri Lanka Principal Investigator
SEDRIC	Social Ecological Dynamics in Rapid Economic Development Infrastructure and coastal Change in South eastern Sri Lanka
IFP	French Institute of Pondicherry
CNRS	French National Center for Scientific Research
AHRC	Archaeological Heritage Research Cooperation
PALAEO	Palaeoecology
PALBO	Palaeobotany
JAS	Journal of Archaeological Science
SCI	Science Citation Index
JAS-REP	Journal of Archaeological Science Report
HOL	Holocene

தொலைநோக்கு:

தெற்காசியாவில் தொல்பொருளியல் மற்றும் அதனைச் சார்ந்த விடயங்களில் ஆராய்ச்சி மற்றும் உயர் கல்வியில் மேன்மையான நிலையமாக விளங்குதல்.

குறிக்கோள்:

(1)இன்றுள்ளவர்களின் நன்மைக்காக கடந்தகால தீர்க்கமான அறிவைப்பெற ஊக்குவித்து மாணவர்களுக்குப் பயிற்சியளித்தல் (2) உலகாய பிரஜைகளாக வளர்ச்சிபெற அவர்களுக்குத் தேவைப்படும் அறிவு, ஞானம் மற்றும் தேர்ச்சிகளை மேம்படுத்தும் சிறப்பான கல்வியினை, பிராந்தியங்களில் இருந்து வரும் மாணவர்களுக்கு வழங்குதல். (3) தொல்பொருளியல் மற்றும் அதனைச் சார்ந்த விடயங்கள் தொடர்பான அறிவை மேம்படுத்தல், ஏனையோருக்கு வழங்குதல் மற்றும் பிரயோகம் என்பவற்றுக்கான தலைமைத்துவத்திற்கு அர்ப்பணிப்புடன் செயற்படல். (4) புலமைப்பரிசில், ஆராய்ச்சி, கற்றறிந்த தொழில்கள், பொதுத் துறை, வணிகம் மற்றும் புத்தாக்கத்துடன் இலங்கையின் மரபுரிமைகள் தொடர்பாக புரிந்துக்கொண்டுள்ள எதிர்கால சந்ததியினரின் தலைவர்களை மேம்படுத்தல்.

நிறுவனத்துடனான இலக்குகள்:

இலக்கு 1: தொல்பொருளியல் மற்றும் அதனைச் சார்ந்த விடயங்கள் தொடர்பாக போட்டியுடன் கூடிய நிபுணர்களை பயிற்றுவித்தல் இலக்கு 2: தொல்பொருளியல் மற்றும் அதனைச் சார்ந்த விடயங்கள் தொடர்பான பிரதான நிறுவனமாக தொல்பொருளியல் பட்டநிலை பின்படிப்பு நிறுவனத்தின் ஆற்றல்களை மேம்படுத்தல் இலக்கு 3: நாட்டின் சமூக பொருளாதார அபிவிருத்தியில் வினைத்திறனுடன் பங்குபற்றல்.

பணிப்பாளர் அவர்களின் மீளாய்வு



தொல் பொருளியல் பட்டப் பின் படிப்பு நிறுவனத்தின் ஆரம்பம் தொடக்கம் முப்பது ஆண்டுகளுக்கு மேலதிகமாக தொல்பொருளியல் துறையில் அனுபவம் பெற்றுக்கொண்டு, அதன் விரிவுரையாளராக பணியாற்றிய நான் 2019 ஆம் ஆண்டில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் எதிர்வரும் மூன்றாண்டு காலத்திற்கு தொல்பொருளியல் பட்டப் பின் படிப்பு நிறுவனத்தின் பணிப்பாளராக நியமனம் பெற்றேன். குறித்த விசேட நேர்முகப் பரீட்சையில் நான் பணிப்பாளராக எனது நியமனத்துடன், தொல் பொருளியல் பட்டப் பின் படிப்பு நிறுவனத்தை பல்வேறு செல்நெறிகளுடன், முன்னெடுத்து செல்லுதல் வேண்டுமென வெளிப்படுத்தினேன். தொல்பொருளியல் நிறுவனத்தை, அதன் பல்வேறு அம்சங்களுடன் உலகளாவிய அணுகலுடன் மேம்படுத்தும் நோக்கத்தினை முதன்மையாகக் கொண்டு மூன்று தசாப்தங்களுக்கு அதிகமான காலப்பகுதி முழுவதும், தொல்பொருளியல் துறையினை அபிவிருத்தி செய்த பணியாற்தொகுதியின் கருத்துகள், முகாமைத்துவ சபை மற்றும் பணிப்பாளர் சபை என்பவற்றின் பங்களிப்புடன் அபிவிருத்தி செய்தல் எமது நோக்கமாகும்.

எமது அபிப்பிராயம் யாதெனில், தேசிய மற்றும் சர்வதேச தேவைகளுக்கு ஏற்ற வகையில் மாணவர்களையும் ஆராய்ச்சியாளர்களையும் உருவாக்குவதன்ஊடாக நிலப் பகுதியிலும், நீர்சார்ந்த பகுதிகளிலும் தொல்பொருளியல் துறையில் கோட்பாடு மற்றும் செய்முறை பண்புகளுடன், தொல்பொருளியல் புலனறிவினைக் கொண்டமைந்த நபரை உருவாக்குதல் மட்டுமின்றி அவரை குறித்த துறையில் முனைப்பானவராக உருவாக்குவதன்மூலம் தொல் பொருளியல் வினயம், இன்றைய நாளின் நோக்குகை மற்றும் கொள்கை கூற்றுடன் சிறந்த வகையில் இணைந்தும், நூறுக்கு அண்மித்த அடிப்படை எண்ணக்கருக்கலை பயன்படுத்தியும் நிலையான அபிவிருத்தியின் பொருட்டு பட்டப் பின் படிப்பு நிறுவனத்தை மேம்படுத்தலாகும்.

இலங்கையில் மரபுரிமை முகாமைத்துவம் மற்றும் தொல் பொருளியல் முயற்சிகளை செயற்படுத்துகின்ற தொல்பொருளியல் திணைக்களம், தேசிய நூதனச்சாலை திணைக்களம், மத்திய கலாசார நிதியம் போனற நிறுவனங்களின் தேவைகளை அடையாளம் காணப்பட்டு தேசிய தேவைகளுக்கு நன்கு பொருந்துகின்ற வகையில் செய்முறை மட்டத்திலான பட்டப் பின் படிப்பு தகைமைகளுடன்கூடிய கற்றவர்களை உருவாக்குதலும் அவரக்ளுடன் எப்போதும் பயிலரங்குகள் நடாத்தலும், பட்டப் பின் படிப்பு நிறுவனத்துடன் நேரடி தொடர்புகள் உள்ள நினைவுச் சின்னங்கள் மற்றும் வேலைத்தளங்களுக்கான சர்வதேச சபை (ICOMOS) கலாச்சார ஆதனங்கள் பாதுகாப்பு மற்றும் தாபித்தல் தொடர்பான கற்கைக்குரிய சர்வதேச நிலையம; ICCROM போன்ற சர்வதேச நிறுவனங்களுடன் இணைந்து நடவடிக்கை மேற்கொள்ளுதல் மற்றும் தொல்பொருளியல் சபை மற்றும் தேசிய அறக்கட்டளை என்பவற்றுடன் தொடர்புகளை பேணிக்கொண்டு விரிவான துறையில் ஒன்றிணைந்த நிறுவனமாக முன்னேற்றத்தை நோக்கி பயணித்தல் அடிப்படை நோக்கமும் குறிக்கோளுமாகும்.

தற்கால உலகளாவிய தேவைகளுக்கு நன்கு பொருந்துகின்ற வகையில் புதிய விஞ்ஞான அம்சங்களுடன் தொல் பொருளியல் மற்றும் அதனைச் சார்ந்த கல்வி நிகழ்ச்சித்திட்டங்களை விருத்தி செய்தல், இலங்கையின் மரபுரிமை மற்றும் அதனுடன் இணைந்த துறைகளின் தேவைகளை பூர்த்தி செய்தல், மிக விஞ்ஞான ரீதியாக புதிய கல்வி நிகழ்ச்சித் திட்டங்களை அறிமுகப்படுத்தல், புதிய தொழிநுட்பம், புதிய உபாய வழிமுறைகள், புத்தாக்க அறிவு வழங்குதல் என்பவற்றின்மூலம் தொல்பொருளியல் துறையை விருத்தி செய்தல், விரிவுரையாளர்களின் கற்கை அறிவு மற்றும் மாணவர்களின் கல்வி மட்டம் விருத்தி செய்வதன்மூலம் உலகளாவிய தரத்தினை அண்மித்தல் மற்றும் இரண்டாவது தரத்திலான மாணவர் குழுக்கள் மற்றும் பட்டப்படிப்பு மேற்கொள்கின்ற மாணவர்களை உருவாக்குவதன்ஊடாக தாபனக் கட்டமைப்பு விருத்தி செய்தல் மற்றும் தொல் பொருளியல் துறையின் மேம்பாடு என்பன எமது எதிர்பார்ப்பாகும். இதற்கு இணையாக சர்வதேச மட்டத்தில் மாணவர்களை மனம் கவரும் பொருட்டு சர்வதேச தரநியம துறைகளை விரிவாக்குதல் மற்றும் தற்போதைக்கு எமக்குள்ள வெளிநாட்டு பல்கலைக்கழகங்களுடனான புரிந்துணர்வு மற்றும் தொடர்புகளை வலுப்படுத்தி இந்த நிறுவனத்தை இலங்கையில் தொல்பொருளியல் மற்றும் மரபுரிமை முகாமைத்துவம் தொடர்பான கல்வி கேந்திரமாக உருவாக்குதல் எனது கடமைப்பொறுப்புகளாகும்.

சிரேட்ட பேராசிரியர் ஏ.எம். காமினி அதிகாரி

பொருளடக்கம்

பக்கம்

பகுதி 1 :	அறிமுகம்	107
பகுதி 2 :	முகாமைத்துவ சபை	108
பகுதி 3 :	அமைப்பு அட்டவணை	109
பகுதி 4 :	தொல்பொருளியல் பட்டப் பின்படிப்பு நிறுவனத்தின் உள்ளடக்கம் 04.1 தொ.பொ.பட்டப் பின் படிப்பு நிறுவனத்தின் விழுமியங்கள் 04.2தொல்பொருளியல் பட்டப்பின்படிப்பு நிறுவனத்தின் வழிகாட்டல் கோட்பாடுகள் 04.3 நிறுவனத்தின் செயலாற்றுகையை மேம்படுத்துவத்தற்கு பின்பற்றும் படி முன்மொழியும் குறுகியகால மற்றும் இடைக்கால செயற்பாடுகளில் அளவிட முடியுமான சாராம்சம். 04.4 தொ.ப.பி.நி. பீடத்தின் சிறப்புத் தேர்ச்சி 04.5 தொல்பொருளியல் பட்டப்பின்படிப்பு நிறுவகத்தின் சிறப்புப் பிரிவு 04.6.நிலையான அபிவிருத்திக்காக தொல்பொருளியல் பட்டப்பின்படிப்பு நிறுவனத்தின் பங்களிப்பு 04.7 ஏனைய நிறுவனங்களுக்கான வசதிகளை வழங்குதல்	110
பகுதி 5 :	வளங்கள் மற்றும் மாணவர்கள் தொடர்பான விபரங்கள்	115
பகுதி 6 :	உள்நாட்டு மாணவர்கள் தொடர்பான விபரங்கள்	118
பகுதி 7 :	பணியாற்தொகுதி தொடர்பான விபரங்கள்	120
பகுதி 8 :	ஆராய்ச்சி, புத்தாக்கம் மற்றும் வெளியீடுகள் தொடர்பான விபரங்கள்	122
பகுதி 9 :	நிகழ்ச்சிகள், கருத்தரங்குகள் மற்றும் பயிலரங்குகள் தொடர்பான விபரங்கள்	123
பகுதி 10 :	பெற்றுக்கொண்ட விருதுகள் தொடர்பான விபரங்கள்	123
பகுதி 11 :	கூட்டங்கள் தொடர்பான விபரங்கள்	124
பகுதி 12 :	ஆராய்ச்சி கருத்திட்டங்கள்	
அ :	தொ.பொ.ப.பின் படிப்பு ஆராய்ச்சி துறைமூலம் நடாத்தப்பட்ட ஆராய்ச்சி செயற்பாடுகளின் முன்னேற்றம்	124
ஆ :	தொ.பொ.ப.பின் படிப்பு கல்விசார் பணியாற் தொகுதிமூலம் நடாத்தப்பட்ட பயிலரங்குகள் மற்றும் கள சுற்றுலாக்கள்,	132
இ:	தேசிய மற்றும் சர்வதேச விருதுகள்	139
ஈ:	வெளிநாட்டு பல்கலைக்கழகங்களின் ஒத்துழைப்புடன் கல்வி ஒத்துழைப்பு, ஆராய்ச்சி மற்றும் ஆராய்ச்சிகளுக்கு வசதிகள் வழங்குவதை மேம்படுத்தல்	143
உ:	பொது மக்களுக்கான அறிவுறுத்தும் நிகழ்ச்சித்திட்டங்கள்	143
ஊ:	தேசிய கல்வி நிறுவனங்களுடன் ஒத்துழைப்பு (NIE) மத்திய கலாசார நிதியம் பதவியணியினரை பயிற்றுவித்தல்	144
எ:	பொது மக்களை அறிவுறுத்தும் நிகழ்ச்சித்திட்டம் ஏனைய திணைக்களங்கள் மற்றும் நிறுவனத்துடன் கல்வி மற்றும் ஆராய்ச்சி ஒத்துழைப்புகளின் மேம்பாடு/வசதிகளை வழங்குதல	145
ஐ:	கல்விசார் பணியாற்தொகுதியின் வெளியீடுகள்	147
பகுதி 13 :	தொல்பொருளியல் பட்டநிலை பின்படிப்பு நிறுவனத்தின் புலனாய்வு நூலகம்	150
பகுதி 14 :	நிதிக் கணக்குகள் 2020	156
பகுதி 15 :	கணக்காய்வாளர் அதிபதி அறிக்கை	206

01. அறிமுகம்

தொல்பொருளியல் பட்டப்பின்படிப்பு நிறுவகமானது (PGIAR) தொல் பொருளியல் ஆராய்ச்சிகளுக்கான மத்திய நிலையமாகும். சமூக விஞ்ஞானம், கல்வெட்டுகள் (Epigraphy) போன்ற மனிதவியல் மற்றும் தூயவிஞ்ஞானம், நாணயவியல் (Numismatics) கலை, கலைச்சரித்திரம், சரித்திர தொல்பொருளியல், சமூக தொல்பொருளியல், பாதுகாத்தல், முற்கால சரித்திரம், பாரம்பரிய கற்கைகள், அருங்காட்சியகக் கல்வி போன்ற உயிரியல் தொல்பொருளியல் ஆகியவற்றை அடிப்படையாகக்கொண்டு எங்களின் இனங்களினதும் (மனித குலத்தின் கடந்த காலம்) வரலாற்றினை உணர்த்தலும், தவறவிடப்பட்ட வரலாற்றின் பக்கங்களினை பூர்த்திசெய்தலுமே தொல்பொருளியல் ஆராய்ச்சியாகும். 1986 ஆம் ஆண்டுத் தொடக்கத்திலிருந்து இலங்கையில் சில நிலையங்கள் மாத்திரம் தொல்பொருளியல் விஞ்ஞானத்தில் உற்சாகமாக, பூரணமாக ஆராய்ச்சிகளை மேற்கொள்கின்றன. தொ.பொ.ப.நி மாத்திரமே தொல் சுற்றாடவியல் (palaeo-ecology), தொல் மகரந்தத்தூள் இயல் (palynology), பைட்டோலித் விஞ்ஞானம; (photolith science), தொல் காலநிலை (palaeo-climate), தொல் சுற்றாடவியல் மாற்றங்கள; (palaeo-environmental changes), உலோகவியல்; (metallurgy), புதைவினை தொல்பொருளியல்;(burial archaeology),எலும்பியல் தொல்பொருளியல்; (osteoarchaeology) மற்றும் ஓவியம் பாதுகாப்பு (painting conservation) ஆகியவற்றைப் புதிய பாணியில் செய்யும் நிறுவனமாகும். “Journal of Archaeological Science”, “Quaternary International, Quaternary Science Reviews”, “Journal of Quaternary Science and Journal of Palaecology”, Palaeogeography and Palaeoclimatology” தொல்பொருளியல் விஞ்ஞான சஞ்சிகை, காலாண்டுச் சர்வதேசம், காலாண்டு விஞ்ஞான மீளாய்வுகள், காலாண்டு விஞ்ஞான சஞ்சிகை, palaeo-ecology சஞ்சிகை, Palaeogeography மற்றும் Palaeoclaimatology ஆகியவற்றில், சஞ்சிகைப் பிரசுரத்தில் பிரதிபலிப்பது போன்று மிகவும் உயர்தரத் தாக்கமுடைய அதன் ஆராய்ச்சி மற்றும் அனுபவத்திற்காக தொ.பா.ப.நி. ஆனது உலகளாவிய ரீதியில் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

இந்தப்பின்னணியில் இந்த நிறுவனமானது பட்டதாரி சிந்தனை மற்றும் ஆராய்ச்சி மாணவர்களுக்கு மிகவும் திறமைவாய்ந்த கல்விச் சுற்றாடலை வழங்குகின்றது. இந்த சிந்தனையுடன் கூடிய பயிற்சிநெறிகளானவை டிப்புளோமா, முதுகலைமாணி, முதுவிஞ்ஞானமாணி நிகழ்ச்சித்திட்டங்களை உள்ளடக்குகின்றது. இந்த நிறுவனமானது தொல்பொருளியலிலான ஆராய்ச்சிப் பட்டங்களான முதுகலைமாணி, முதுவிஞ்ஞானமாணி, முதுதத்துவமாணி, கலாநிதி (முறையே MA, MSc, MPhil and PhD) ஆகிய ஆராய்ச்சிப் பட்டங்களுக்கு மிகவும் உயர்ந்தளவில் ஏற்றுக்கொள்ளப்பட்ட நிலையங்களில் ஒன்றாகும். இறுதியாக தொ.பொ.ப.நி இன் முக்கிய குறிக்கோளானது எமது நாட்டின் கடந்தகால குடிவாழ்வினது, எமது பாரம்பரியங்களினைப் பாதுகாப்பதற்கு முக்கிய கவனத்துடன் இருப்பதற்குமாக, மக்களுக்கு புதிய அறிவினைப் பரவச்செய்வதும் எமது தேசத்தினைப் பற்றிப் பெருமைகொள்ளுவதும் ஆகும்.



02. முகாமைத்துவச் சபை

உத்தியோகபூர்வமாக தெரிவாகிய உறுப்பினர்கள்.

சிரேட்ட பேராசிரியர் ஏ.எம். காமிணி அதிகாரி	- பணிப்பாளர், தொல் பொருளியல் பட்டப் பின்படிப்பு நிறுவனம்
திரு.ரி.என்.ஹெட்டிஆரச்சி	-மேலதிக செயலாளர் (அபிவிருத்தி) உயர் கல்வி அமைச்சு
திரு.கே.டி.எஸ்.பெரேரா	- மேலதிக பணிப்பாளர் நாயகம், தேசிய திட்டமிடல் திணைக்களம், நிதி பொருளாதார மற்றும் கொள்கை அபிவிருத்தி அமைச்சு
கலாநிதி செனரத் திசாநாயக்க நாயகம்	- தொல்பொருளியல் பணிப்பாளர்
பேராசிரியர் ஆரியரத்ன ஜயமகா நிறுவனம்	- பீடாதிபதி, பட்டப்படிப்பு கற்கை களனிப் பல்கலைக்கழகம்
கலாநிதி பீ.என்.டீ.பிரனாந்து	- பீடாதிபதி, வர்த்தக மற்றும் முகாமைத்துவ கற்கை பீடம், களனிப் பல்கலைக்கழகம்

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் நியமனம் செய்கின்ற உறுப்பினர்கள்

பேராசிரியர் கே.டி.பரணவித்தான	-	(2020 திசெம்பர் 30 தொடக்கம்)
பேராசிரியர் ரீ.ஜீ.குலதுங்க	-	
பேராசிரியர் பீ.வீ. ஹேமந்த சிறிசேன	-	
பேராசிரியர் காமிணி ரணசிங்க	-	வரலாறு மற்றும் தொல்பொருளியல் கற்கை பிரிவு, இலங்கை ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம்
கலாநிதி சாமிந்த அபேசிங்க	-	சர்வதேச கற்கை பிரிவு, களனிய பல்கலைக்கழகம்
பேராசிரியர் ஹரேந்திர காரியவசம்	-	கற்கை பிரிவு தலைவர், கணக்காளர் திணைக்களம், ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்-கழகம்


சிரேட்ட உதவிப் பதிவாளர்(செயலாளர்)

திருமதி.எல்.டி.கே.ரீ.தசநாயக்க

சிரேட்ட உதவிப் பொருளாளர்(அழைப்பின் பேரில்)
திருமதி.எம்.கே.டி.லக்மாலி (2020.07.30 வரை)

உதவிப் பொருளாளர் (அழைப்பின் பேரில்)
திருமதி ரன்ஜலா காரியவசம் (2020.08.01 இன்று வரை)

03 அமைப்புஅட்டவணை



04 தொல்பொருளியல் பட்டப் பின்படிப்பு நிறுவனத்தின் உள்ளடக்கம்

04.1 தொ.பொ.பட்டப் பின் படிப்பு நிறுவனத்தின் விழுமியங்கள்

தொல்பொருளியல் பட்டப்பின்படிப்பு நிறுவனத்தால் கல்விசார் குழுச் செயற்பாடுகள் மூலமாக வழிநடாத்தப்படும் தொல் பொருளியல் மற்றும் அதனைச் சார்ந்த விடயங்களின் புலமைப் பரிசில்கள், புத்தாக்கம் மற்றும் சமூக பொறுப்புகளின் சிறப்பினை மேம்படுத்தப்படுகிறது. அதன் விழுமியங்கள் பின்வருமாறாகும்.

சிறப்பின் மீதான அர்ப்பணிப்பு மற்றும் ஆற்றலின் மீதான முன்னேற்றம்.

நியாயம், வாய்ப்பு மற்றும் சமத்துவம்

பல்வகை.

கல்வி ஒருமைப்பாடு மற்றும் உயர்தொழில்தரம்

உள்ளடக்கல்

திறந்த தன்மை

நடத்தை நெறிமுறைகளை ஏற்றுக்கொள்ளக்கூடிய தர நிலைகள்

புத்தாக்கம் மற்றும் படைப்பாற்றலை மேம்படுத்தல்

நிருவாகத்தின் பொறுப்புக்கூறலும், வெளிப்படைத்தன்மையும்.

தலைமைத்துவத்தினை அபிவிருத்திசெய்தல்.

சுற்றாடலின் நிலைத்தன்மை

04.2 தொல்பொருளியல் பட்டப்பின்படிப்பு நிறுவனத்தின் வழிகாட்டல் கோட்பாடுகள்

தொல்பொருளியலிலும் அதன் பல்வேறு உப பிரிவுகளும் தொடர்பாக விளங்கிக்கொள்ளல், கற்றல் மற்றும் ஆராய்ச்சிகளுக்கு நன்றாக தீட்டுப்படுத்தப்பட்ட நடைமுறைகளுடன், இணைந்து உயர் தரத்திலான கற்கைகள், வினைத்திறன் மற்றும் நட்பு முறையிலான நிருவாக சூழலுடன் ஈடுபடுவதற்கு தொல்பொருளியல் பட்டப்பின்படிப்பு நிறுவனத்தில் தங்களுக்கு சிறப்பான வாய்ப்பு அமையப் பெறுகின்றது. தொல் பொருளியல் பட்டப் பின் படிப்பு நிறுவனத்தில் உயர் தரத்திலான புலமைப் பரிசில்கள் வழங்குதல், அறிவைப் பரப்புதல், சிறந்த மற்றும் அனுபவம் வாய்ந்த சகாக்களுக்கிடையில் பாரிய கல்வித் தொடர்பை உருவாக்குவதற்கு, மிகவும் நியாயமான மற்றும் சமமான வாய்பபுகளை வழங்கும் ஆராய்ச்சி, கற்கை அத்துடன் மேற்பார்வை என்பவற்றுக்கு பரந்துபட்ட எல்லைக்குள் நிபுணர்கள் உள்ளனர்.

04.3 நிறுவனத்தின் செயலாற்றுகையை மேம்படுத்துவத்தற்கு பின்பற்றும் படி முன்மொழியும் குறுகியகால மற்றும் இடைக்கால செயற்பாடுகளில் அளவிட முடியுமான சாராம்சம்.

4.3.1 தொல் பொருளியல் பட்டப்பின்படிப்பு நிறுவனம் தற்போது பட்டப்பின்படிப்பு நிறுவனமாக அதற்குரியதான தேவைகளை பூர்த்தி செய்யக் கூடிய வகையில் விரிவான கற்கை முகாமைத்துவ முறைமையை மேம்படுத்தியுள்ளதுடன், மாணவர் கைந்நூலினையும் தயாரித்துள்ளது.

4.3.2 தொல் காலநிலை (Palaco-Climate) தொல் சுற்றாடவியல் (Palaco Environmental) நாணயவியல் மற்றும் வெட்டெழுத்தியல் (Numismatic and Epigraphy) ஆகியவற்றிற்கு வழிசமைக்கும் வகையில் இரண்டு புதிய பயிற்சிநெறிகள் அறிமுகம் செய்து வைக்கப்பட்டுள்ளன.

4.3.3. தொல்பொருளியல் பட்டப்பின்படிப்பு நிறுவனத்தில் களச்சுற்றுலாக்கள் மற்றும் ஆய்வுகூடத்தின் பணிகளை மேற்கொள்வதற்கு பட்டப்பின்படிப்பு மாணவர்களுக்கான வசதிகள் பலப்படுத்தப்பட்டுள்ளன.

4.3.4. சர்வதேச, தேசிய சமூகங்களின் கூட்டுச்சேர்தலுடன் கூடிய ஏழு கல்விசார் ஒத்துழைப்பு நிகழ்ச்சித்திட்டங்கள் (கருத்தரங்குகளும், பயிற்சிப்பட்டறைகளும்) பூர்த்திசெய்யப்பட்டுள்ளன. இது சம்பந்தமாக மேலும் கற்கை கலந்துரையாடல்கள், ஆராய்ச்சிக்கழங்கள் மற்றும் பிரசுரங்கள் என்பவற்றுக்கு அதிக வாய்ப்புகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

4.3.5 தொ.ப.பி.நி. பீடமானது பல ஆராய்ச்சி பிரசுரங்களை உருவாக்க முடிந்துள்ளதுடன், தொ.ப.பி.நி.இன் ஒவ்வொரு பீட அங்கத்தவர்களும் தற்போது கள ஆராய்ச்சியில் ஈடுபட்டுள்ளனர். கூகுல் கற்போர் குறியீடு மற்றும் ஆராய்ச்சி திறவுக் கணக்குகள் ஒவ்வொரு பீட அங்கத்தவர்களுக்கும் (Google scholar Index) மற்றும் Research Gate Accounts" ஒழுங்குசெய்யப்பட்டுள்ளன.

4.3.6 முன்னேற்பாடகவே எல்லாக் கல்வி ஆண்டுகளையும் திட்டமிடுவதற்கும், முன்னேற்பாடாக பட்டியலிடப்பட்ட எல்லாக் கட்டாய நிகழ்வுகளிலும் அதிகமானவற்றை உள்ளடக்கிய கல்விசார் நாட்காட்டியினையும் தயாரிப்பதற்கு தொ.ப.பி.நிறுவனத்திற்கு இயன்றுள்ளது.

4.3.7 ஒப்பீட்டளவில் தாமதமின்றி பரீட்சை முடிவுகளை வெளியிடுவதற்கு தொ.ப.பி.நிலையத்திற்கு முடிந்துள்ளது.

4.3.8 தொ.ப.பி.நிறுவகத்திற்கு பாடவிதானம் மீளாய்வு செய்யக்கூடியதாக இருந்துள்ளதுடன் புதிய உயர் பட்டதாரி நிகழ்ச்சித்திட்டத்தினையும் அறிமுகம்செய்யக் கூடியதாக இருந்துள்ளது.

4.3.9 தொ.ப.பி.நி. ஆனது அதன் மாணவர்களுக்கிடையில் கல்விசார் போட்டித் தன்மையினை ஊக்குவிப்பதற்கென அதற்குரிய விதத்தில் புதிய மரபுகளை ஆரம்பிக்கக்கூடியதாக இருந்துள்ளதுடன், தொ.ப.பி.நி.இன் பணியாளர்கள் மற்றும்

தொல்பொருளியலாளர் சமூகங்களுக்கிடையில் ஒரு சமூக உயர்வினை ஊக்குவிப்பதற்கென ஒரு விருதுவழங்கல் விழாவினையும் ஆரம்பித்துள்ளது.

4.3.10 தொல்பொருளியல் மற்றும் அதனுடன் கூடிய பாடங்களினதும் அபிவிருத்திக்குத் தனித்துவமாக பங்களிப்பினைச் செய்துள்ள தனியாட்களையும், நிறுவகத்திற்குக் கீர்த்தியினைக் கொண்டுவருபவர்களையும் அடையாளம் காணுமுகமாக ஒரு விருதுவழங்கல் முறையினை ஆரம்பித்துள்ளது. இந்த விருதுவழங்கல் திட்டமானது தொ.ப.பி.நி.இன் "Brick Award" PGIAR என அழைக்கப்படும்.

4.3.11 இரவல் எடுத்த புத்தகங்களை உறுதி செய்யக்கூடியவாறு, ஒரு நூலக அங்கத்துவ முறைமையினை வைத்திருக்க தொ.ப.பி.நி. இன் நூலகமானது வழிகண்டுள்ளதுடன் நூலகப்பாதுகாப்பு மற்றும் நூலகக் கையேட்டினையும் தயாரிக்க முடிந்துள்ளது.

4.3.12 இலங்கையிலுள்ள சிறந்த நூலகங்களில் ஒன்றாக வழிசமைக்க தொ.ப.பி.நி.இன் நூலகமானது திறந்து வைக்கப்பட்டதுடன், நூலகத்தில் எண் முறையிலான தரவு அடிப்படையைக் கொண்ட எண்ணியல் (Digital) புதிய செயற்றிட்டங்கள் கலந்துரையாடல் நிலையில் உள்ளன.

4.3.13 உயர் கல்வி அமைச்சிடமிருந்து பெற்றுக்கொள்ளப்படும் ஒத்துடைப்புடன், வலைப்பின்னல் மற்றும் இணையத்தள வழிமுறைகளை உள்ளடக்கிய திறமையான உபகரணங்களுடன்கூடிய தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப (ICTO) வசதிகள் கலந்துரையாடல் நிலையில் உள்ளன.

4.3.14 மத்திய கலாச்சார நிதியச் செயற்பாடுகளில், தொ.ப.பி.நி. கூடிய ஈடுபாட்டைக் கொண்டுள்ளதாக வந்துள்ளதுடன் தொல்பொருளியல் தொடர்பான பாரம்பரியமான மற்றும் அரசாங்க நிறுவனங்களில் பல்வேறு பிரச்சினைகளைத் தீர்க்கும் பல்வேறு செயற்றிட்டங்களிலும் பங்குபற்றியது.

4.3.15 தொ.ப.பி.நி. நிறுவனமானது அதன் பொது விரிவுரை நிகழ்ச்சி மற்றும் அடிப்படைப் பாடநெறி என்பவற்றுடன் ஒரு பொது நிறுவகமாக வரும் அதன் தொலைதூர நோக்கத்ததை ஒரு பகுதியளவில் யதார்த்தமாக்கியுள்ளது.

04.4 தொ.ப.பி.நி. பீடத்தின் சிறப்புத் தேர்ச்சி

நாட்டின் முழுமையான பல்கலைக்கழக முறைமை மற்றும் தொல்பொருளியல் தொடர்பான ஏனைய நிறுவனங்களில் தேவைகளை பூர்த்தி செய்வதற்காக தொ.ப.பி.நிறுவகத்திற்கு பின்வரும் வசதிகள் காணப்படுகின்றன.

களத் தொல்பொருளியல்.

சரித்திர ரீதியான தொல்பொருளியல்.

கட்டிடக் கலை

முற்காலச் சரித்திரம்

கலைச் சரித்திரம்

சரித்திர ரீதியான உலோகவியல்

சுற்றாடல் தொல்பொருளியல்

04.5 தொல்பொருளியல் பட்டப்பின்படிப்பு நிறுவகத்தின் சிறப்புப் பிரிவு

தொ.ப.பி.நி. பின்வரும் சிறப்புப் பிரிவுகளின் கீழ் ஆராய்ச்சியினையும், கற்பித்தலையும் மேற்கொள்வதுடன், தொல்பொருளியல் தொடர்பான கற்கைகளை தொடரவோ அல்லது பின்பற்றவோ விரும்பும் மாணவர்கள் தமது கற்கைகளை பின்வரும் சிறப்புப் பிரிவுகளில் தெரிவு செய்ய முடியும். அவையாவன:

களத் தொல்பொருளியல் அலகு:

கலாச்சார மூலப்பொருள் பகுப்பாய்வுக்கான ஆய்வுகூடம்: (LCMA)

தொல் சுற்றாடவியல் (Paleoecology) மற்றும் தாவர தொல்லியல் (Palynology) என்பவற்றுக்கான ஆய்வுகூடம்.

04.6. நிலையான அபிவிருத்திக்காக தொல்பொருளியல் பட்டப்பின்படிப்பு நிறுவனத்தின் பங்களிப்பு

நோக்கம் 07 – தாக்குபிடிக்க முடியுமான, நம்பகரமான, நிலையான மற்றும் நவீன வலுசக்தி அணுகுமுறை உறுதிப்படுத்தல். எல்ஈடி விளக்குகளை அறிமுகப்படுத்துவதன்ஊடாக வலுசக்தி பயன்படுத்தலை குறைத்தல்.
நிறுவனத்தின் தேவைகளை பூர்த்தி செய்வதற்கு சூரிய சக்தியை பெற்றுக்கொள்வதற்கு கருத்திட்டம் ஆரம்பித்தல்.

சூரிய வலுசக்தியை பயன்படுத்தி மின்சாரம் உபயோகப்படுத்தல் தொடர்பாக கல்வி அமைச்சுடன் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. குறித்த செயற்பாடுகளை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு ஊடாக இந்திய க்ரேடிட்லயின் முறை மூலம் பெற்றுக்கொள்வதற்கு நிறுவனத்தால் முன்மொழிவு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. தற்போது WIFI தொடர்பினை பெற்றுக்கொள்வதற்காக உயர் கல்வி அமைச்சு மூலம் இந்த நிறுவனத்தில் தாபிப்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதால், குறித்த பணி முடிவடைந்த பின்னர் சூரிய வலுசக்தி கருத்திட்டம் பொருட்டு ஒதுக்கீடு கிடைக்கப்பெறும் என்று நம்புகின்றோம்.

நோக்கம் 12 – நிலையான நுகர்வு மற்றும் உற்பத்தி மாதிரிகளை உறுதிப்படுத்தல்
தொல்பொருளியல் பட்டப்பின்படிப்பு நிறுவனத்தின் கொம்பொஸ்ட் பாத்தியுடன் கழிவுப் பொருட்கள் முகாமைத்துவம் மேற்கொள்ளுதல் மற்றும் அதன் உற்பத்திகளை நிலையான நுகர்வு பொருட்டு மீள பயன்படுத்தல்.

தொல்பொருளியல் பட்டப்பின்படிப்பு நிறுவனம் மிக சிறிய நிலப் பகுதியல் அமைந்துள்ளது. ஆயினும் அதனுள் திரட்டப்படுகின்ற கழிவுகளை உபயோகப்படுத்தி அவற்றை முகாமைத்துவம் செய்து சேதனை பசளை உற்பத்தி செய்து நிறுவனத்தில் உள்ள களஞ்சியத்தில் சேர்க்கப்படுகிறது.

04.7 ஏனைய நிறுவனங்களுக்கான வசதிகளை வழங்குதல்

(அ) நினைவுச் சின்னங்கள் மற்றும் வேலைத்தளங்களுக்கான சர்வதேச சபை - இலங்கை (ICOMOS)

இதன்போது எல்லா செயற்பாடுகளும் நினைவுச் சின்னங்கள் மற்றும் வேலைத்தளங்களுக்கான சர்வதேச சபை - இலங்கை (ICOMOS) மற்றும் தொல்பொருளியல் பட்டப்பின்படிப்பு நிறுவனம் என்பவற்றுக்கிடையில் கைச்சாத்திடப்பட்ட உடன்படிக்கை பிரகாரம் மேற்கொள்ளப்படுகிறது. அதன்படி தேசிய அறக்கட்டளை நிதியத்தின், 120 சதுர அடி இடத்தினை அலுவலக அறையாக பயன்படுத்துவதுடன், கூட்டங்கள், போதனைகள் பயிற்சி பட்டறைகள் பொருட்டு ஒத்துழைப்பு வழங்கப்படுகின்றது. இந்த பணிகளின் பொருட்டு தொல்பொருளியல் பட்டப்பின்படிப்பு நிறுவனத்தின் கேட்போர்கூடம் மற்றும் ஏனைய வளங்கள் பயன்படுத்தப்படுகிறது. நினைவுச் சின்னங்கள் மற்றும் வேலைத்தளங்களுக்கான சர்வதேச சபை - இலங்கை (ICOMOS) தொல்பொருளியல் தொடர்பான ஆற்றல்கள், அனுபவம் மற்றும் அறிவு பகிரும் மற்றும் பகிர்ந்துகொள்கின்ற செயற்பாடுகளை ஒழுங்கமைப்பதுடன், இலங்கையின் மரபுரிமைகளை மேம்படுத்தும் அறிவுறுத்தும் நிகழ்ச்சிகளுக்கான ஒத்துழைப்பை வழங்குகின்றது. இதன்போது முகாமைத்துவ சபையால் நிதமும் அதன் செயலாற்றுகை மேற்பார்வை செய்யப்படுகிறது.

ஆ) தேசிய அறக்கட்டளை - இலங்கை

தேசிய அறக்கட்டளை மற்றும் தொல்பொருளியல் பட்டப்பின்படிப்பு நிறுவகம் என்பவற்றுக்கிடையில் கைச்சாத்திடப்படும் புரிந்துணர்வு உடன்படிக்கை பிரகாரம் இங்கு எல்லா நடவடிக்கைகளும் மேற்கொள்ள்பபடும். அதன்படி தேசிய அறக்கட்டளை நிதியத்தின், 120 சதுர அடி இடத்தினை அலுவலக அறையாக பயன்படுத்துவதுடன், எல்லா கூட்டங்களும் தொல்பொருளியல் பட்டப்பின்படிப்பு நிறுவனத்தின் கோட்போர்கூடத்தில் நடாத்தப்படுகின்றது. தேசியக் கட்டளை மூலம் மாதாந்தம் நடாத்தப்படும் போதனை அமர்வுகளில் பங்குபற்றுவதற்காக தொல்பொருளியல் பட்டப்பின்படிப்பு நிறுவனத்தின் ஆராய்ச்சிகள் பொருட்டு மாணவர்களை அழைக்கப்படுவதுடன், தேசிய அறக்கட்டளையின் எல்லா வெளியீடுகளும் அன்பளிப்பு

வகைப்படுத்தலின்கீழ் தொல்பொருளியல் பட்டப்பின்படிப்பு நிறுவனத்தின் நூலகத்திடம் வழங்கப்படுகிறது. இதன்போது முகாமைத்துவ சபையால் நிதமும் அதன் செயலாற்றுகை மேற்பார்வை செய்யப்படுகிறது.

05.வளங்களும் மாணவர்களும் தொடர்பான விபரங்கள்

கல்விசார் கற்கைநெறி	மாணவர்களின் மொத்த எண்ணிக்கை 2018	மாணவர்களின் மொத்த எண்ணிக்கை 2019	மாணவர்களின் மொத்த எண்ணிக்கை 2020 *	மொத்த கல்விசார் பதவியணி	மொத்த நிருவாகப் பதவியணி **	மொத்த கல்விசார் உதவிப் பதவியணி	மொத்த கல்விசாரா பதவியணி
தொல்பொருளியல் பட்டப்பின்படிப்பு டிப்ளோமா	37	48	46	12	05	04	21
மரபுரிமைகள் தொடர்-பான தொல்பொருளியல் பட்டப்பின்படிப்பு டிப்ளோமா	0	07	08				
கலை வரலாறு தொடர்-பான தொல்பொருளியல் பட்டப்பின்படிப்பு டிப்ளோமா	0	12	10				
தொல்பொருளியல் முதுமாணி பட்டம் (ஆராய்ச்சிகள் மூலம்)	31	19	18				
தொல்பொருளியல் தொடர்பான முதுமாணி பட்டம் (போதனைகள்/ஆராய்ச்சிகள்)	17	05	05				
தொல்பொருளியல் விஞ்ஞான முதுமாணி பட்டம் (போதனைகள்/ஆராய்ச்சிகள்)	96	107	99				
தொல்பொருளியல் தொடர்பான கலாநிதி பட்டம்	43	21	17				
தொல்லியல் முதுதத்துவமாணி பட்டம்	41	43	41				
மொத்தம்	265	262	244	12	05	04	21

குறிப்பு:

* நிரந்தர சிரேஷ்ட பேராசிரியர்கள், பேராசிரியர்கள், சிரேஷ்ட விரிவுரையாளர்கள், விரிவுரையாளர் (தகுதிகாண்), சிரேஷ்ட உதவி நூலகர்.

** பிரதி நிதியாளர், சிரேஷ்ட உதவிப் பதிவாளர், உதவிப் பதிவாளர்/ நிதியாளர்.

*** இந்த பதவியணியானது 01.06.2018 தொடக்கம் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

கடந்த மூன்று ஆண்டு காலப் பகுதிக்குள் பட்டப் பின் படிப்பு டிப்ளோமா மாணவர்களின் எண்ணிக்கை கவனத்தில் கொள்ளப்பட்டுள்ளது. (அது இந்த கற்கைநெறியின் ஆகக்கூடிய காலப் பகுதி 3 ஆண்டுகள் ஆவதால் ஆகும்.)


தொல்லியல் முது விஞ்ஞானமாணி கற்கைநெறி – கடந்த 04 ஆண்டுகளிலான மாணவர்களை கவனத்தில் கொள்ளப்பட்டுள்ளது. (அது இந்த கற்கைநெறியின் ஆகக்கூடிய காலப் பகுதி 4 ஆண்டுகள் ஆவதால் ஆகும்

கலை முதுமாணி பட்டம் தொடர்பான கற்கைநெறி தொடர்பில் - (போதனைகள் மற்றும் ஆராய்ச்சி) கடந்த 04 ஆண்டுகளிலான மாணவர்களை கவனத்தில் கொள்ளப்பட்டுள்ளது. (அது இந்த கற்கைநெறியின் ஆகக்கூடிய காலப் பகுதி 4 ஆண்டுகள் ஆவதால் ஆகும்.

தொல்பொருளியல் கலை முதுமாணி பட்டம் (ஆராய்ச்சிகள் மூலம்) தொடர்பான தொடர்பில் - கடந்த 04 ஆண்டுகளிலான மாணவர்களை கவனத்தில் கொள்ளப்பட்டுள்ளது. (அது இந்த கற்கைநெறியின் ஆகக்கூடிய காலப் பகுதி 4 ஆண்டுகள் ஆவதால் ஆகும்.


தொல்பொருளியல் தொடர்பான கலாநிதி பட்டம் தொடர்பில் கடந்த 5 ஆண்டுகளிலான மாணவர்களை கவனத்தில் கொள்ளப்பட்டுள்ளது. ((அது இந்த கற்கைநெறியின் ஆகக்கூடிய காலப் பகுதி 5 ஆண்டுகள் ஆவதால் ஆகும்.

தொல்பொருளியல் தொடர்பான கலாநிதி பட்டம் தொடர்பில் கடந்த 10 ஆண்டுகளிலான மாணவர்களை கவனத்தில் கொள்ளப்பட்டுள்ளது. ((அது இந்த கற்கைநெறியின் ஆகக்கூடிய காலப் பகுதி 10 ஆண்டுகள் ஆவதால் ஆகும்.



5.1 பட்டப்படிப்பு அல்லாத கற்கைநெறிகளுக்கு உள்வாங்குதல்

கற்கை நெறி	மாணவர்களின் எண்ணிக்கை 2017	மாணவர்களின் எண்ணிக்கை 2018	மாணவர்களின் எண்ணிக்கை 2019	மாணவர்களின் எண்ணிக்கை 2020
புராதன உயிரியல் பல்வகை டிப்புளோமா	46	22	60	49
கலை வரலாற்றில் சான்றிதழ் கற்கைநெறி	18	25	40	28
மிருக தொல் பொருளியல் டிப்புளோமா	-	48	35	35
தொல்பொருளியல் தொடர்பான சான்றிதழ் பயிற்சிநெறி	-	17	25	15
கலாச்சார சுற்றுலா அலுவல்கள் தொடர்பான சான்றிதழ் கற்கைநெறி	-	18	30	30
தொல்பொருளியல் மற்றும் கலாசார நடவடிக்கைகள் தொடர்பான டிப்ளோமா	-	-	-	62
மொத்தம்	**64**	**130**	**190**	**219**




06. உள்நாட்டு மாணவர்களின் தொடர்பான விபரங்கள்:

கற்கைநெறி	2020 ஆட்சேர்ப்பு	1ஸ்வருட மாணவர்கள்	2ஸ்வருட மாணவர்கள்	3ம் வருட மாணவர்கள்	4ஸ் வருட மாணவர்கள்
தொல்பொருளியலில் தொடர்பான பட்டப் பின் படிப்பு டிப்புளோமா	59*	46	06	-	
கலை வரலாறு தொடர்பான தொல்பொருளியல் பட்டப் பின் படிப்பு டிப்ளோமா	2*	10	-	-	
மரபுரிமைகள் தொடர்பான தொல்பொருளியல் பட்டப் பின் படிப்பு டிப்ளோமா	5*	08	-	-	
தொல்பொருளியலில் கலை முதுமாணி பட்டம் (ஆராய்ச்சிகள் மூலம்)	20*	05	07	06	02
தொல் பொருளியல் கலை முதுமாணி பட்டம் (போதனைகள்/ஆராய்ச்சி)	0	0	04	01	-
தொல்பொருளியல் விஞ்ஞான முதுமாணி (போதனகைள்/ஆராய்ச்சி)	40*	33	35	15	16
தொல்பொருளியல் தொடர்பான கலாநிதி பட்டம் MPhil Archaeology	3*	04	03	05	11●
தொல்பொருளியல் கலாநிதி பட்டம் PhD/Archaeology	10*	05	02	02	27**
மொத்தம்	**144**	**111**	**57**	**29**	**56**

குறிப்பு * மூலம் 4 மற்றும் 5 ஆண்டுகளில் மாணவர்கள் உள்ளடங்குவார்கள்

** மூலம் 4,5,6,7,8,9 மற்றும் 10 ஆண்டுகளில் மாணவர்கள் உள்ளடங்குவார்கள்



06.1 பட்டம் பெறுகின்ற மாணவர்கள் தொடர்பான விபரங்கள்

கற்கை நெறி	2017 ஆண்டு	2018 ஆண்டு	2019 ஆண்டு	2020 ஆண்டு
தொல்பொருளியலில் பட்டப் பின் படிப்பு டிப்புளோமா	26	24	73	22
நூதனச்சாலை நிருவாகவியல் தொடர்பான பட்டநிலை பின்படிப்பு டிப்ளோமா	-	-	-	05
தொல்பொருளியலில் கலை முதுமாணி பட்டம் (ஆராய்ச்சிகள் மூலம்)	01	01	01	03
தொல் பொருளியல் கலை முதுமாணி பட்டம் (போதனைகள்/ஆராய்ச்சி)	01	01	01	01
தொல் பொருளியல் விஞ்ஞான முதுமாணி (MSc. in Archaeology (Co/Research)	15	25	44	4
தொல்பொருளியல் தொடர்பான கலாநிதி பட்டம் MPhil Archaeology	02	01	03	4
தொல்பொருளியல் கலாநிதி பட்டம்PhD/Archaeology	01	01	01	1
மொத்தம்	**46**	**53**	**123**	**40**

07. பணியாற்தொகுதி தொடர்பான விபரங்கள்:

07.01 சிரேட்ட மட்டத்திலான பணியாளர் விபரம்:

பதவி	சம்பளஅளவுத்திட்டம்	அங்கீகரிக்கப்பட்டது	உண்மையானது	வெற்றிடம்
பணிப்பாளர்	U-AC 5(II)	01	*01	-
பேராசிரியர்	U-AC 5(II)	10	02	02
இணைப் பேராசிரியர்	U-AC 4		-	
சிரேஷ்டவிரிவுரையாளர்/ விரிவுரையாளர்/விரிவுரையாளர் (தகுதிகாண்)	Grade I U-AC 3(I)		02	
	Grade II U-AC 3(II)		03	
	Lecturer U-AC 3(III)		01	
சிரேஷ்ட உதவி நூலகர்	U-AC 3(II)	01	01	-
பிரதி பதிவாளர்	U-EX 2(a)	01	-	01
பிரதி நிதியாளர்	U-EX 2(a)	01	**01	-
சிசேட்ட உதவி நிதியாளர்	U-EX 2(II)	01	01	-
மொத்தம்		**15**	**13**	**03**

* மூன்று ஆண்டு காலத்திற்கு 2019.09.02 ஆந் திகதி தொடக்கம் பணிப்பாளர் நியமனம் செய்யப்பட்டது.

** சிரேட்ட உதவி நிதியாளர் 2019.05.01 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைப்படும் வகையில் பிரதி நிதயிளார் பதவிக்கு நியமனம் செய்யப்பட்டது.

07.02 மூன்றாம் நிலை மட்டத்தின் பதவியணி விபரம்

பதவி	சம்பள அளவுத்திட்டம்	அங்கீகரிக்கப்பட்டது	உண்மையானது	வெற்றிடங்களின் எண்ணிக்கை
பிரதிப் பதிவாளர்	U-EX 1(II)	01	01	-
உதவி நிதியாளர்	U-EX 1(II)	01	01	-
விஞ்ஞான உதவியாளர் தரம் 11 மற்றும் 1	U-AS 2(II)	03	03	-
வேலைஉதவியாளர் மற்றும் முறைமை பகுப்பாய்வாளர் தரம் 11 மற்றும் 1	U-AS 1(I)	01	-	01
மொத்தம்		**06**	**05**	**01**

07.03 இரண்டாவது மட்டத்தின் பதவியணி விபரம்:

பதவி	சம்பள அளவுத்திட்டம்	அங்கீகரிக்கப்பட்டது	உண்மையானது	வெற்றிடம்
தொழில்நுட்ப உத்தியோகத்தர் தரம் - III/II/I	U-MN 1(III)	01	01	-
தொழில்நுட்ப உத்தியோகத்தர்(சிவில்) தரம் - III/II/I	U-MN 4(II)	01	-	01
முகாமைத்துவ உதவியாளர் (கணக்குப்-பதியுநர்)	U-MN 1(III)	01	01	
முகாமைத்துவ உதவியாளர் – தரம் III/II/I	U-MN 4 (I)	09	02	03
	U-MN 4 (II)		01	
	U-MN 1(III)		02	
	U-MN 1 (I)		01	
நூலக தகவல் உதவியாளர் தரம் III/II/I	U-MN 1(III)	03	01	01
	U-MN 4(I)		01	
மொத்தம்		**15**	**10**	**05**

07.04 ஆரம்ப மட்டத்தின் பதவியணி விபரம்:

பதவி	சம்பள அளவுத்திட்டம்	அங்கீகரிக்கப்பட்டது	உண்மையானது	வெற்றிடம்
சாரதி III / II / I /விசேட தரம்	U-PL 3(I)	02	01	-
	U-PL 3(III)		01	
இரசாயனகூட உதவியாளர் III / II / I/ விசேட தரம்	U-PL 2(I)	01	01	-
வேலை உதவியாளர் III / II / I / விசேட தரம்	U-PL 1(sp.) U-PL 1(III)	03	01	02
மொத்தம்		**06**	**04**	**02**

08. ஆராய்ச்சி, புத்தாக்கம் மற்றும் வெளியீடுகள் தொடர்பான விபரங்கள்

விடயம்	பிரசுரிக்கப்பட்ட 2018	பிரசுரிக்கப்பட்ட 2019	பிரசுரிக்கப்பட்ட 2020
சஞ்சிகை பிரசுரித்தல்	11	4	12
புத்தகங்கள் பிரசுரித்தல்	03	1	02
கட்டுரை பிரசுரித்தல்	10	2	
ஏனைய பிரசுரங்கள், உ-ம், கருத்தரங்கு சுருக்கம், இணையத்தள பிரசுரம், முக்கியமான உரை, மற்றும் ஊடக நிகழ்ச்சிகள்	20	11	05
மொத்தம்	**43**	**18**	**19**

09 நிகழ்ச்சிகள், கருத்தரங்குகள் மற்றும் பயிலரங்குகள் தொடர்பான விபரங்கள்

விடயம்	கவனிக்கப் பட்டவை	பூர்த்திசெய்யப் பட்டவை
பட்டப்பின்படிப்பு கற்கைநெறிகளின் எண்ணிக்கை	04	-
டிப்புளோமா கற்கைநெறிகளின் எண்ணிக்கை	01	-
சான்றிதழ் கற்கைநெறிகளின் எண்ணிக்கை	01	01
ஏனையவை (கருத்தரங்கு/ பயிற்சிப்பட்டறை/ களச் சுற்றுலா)	19	19
மொத்தம்	**25**	**20**

10. பெற்றுக்கொண்ட விருதுகள் தொடர்பான விபரங்கள்

விடயம்	விருதுகளின் எண்ணிக்கை	விரிவுரையாளர்களின் எண்ணிக்கை
உள்நாட்டு விருதுகள்	02	01
சர்வதேச மட்டத்திலான விருதுகள்	-	-
சர்வதேச விருதுகள்	13	02
ஏனையவை	-	-
மொத்தம்	15	02

11. கூட்டங்கள் தொடர்பான விபரங்கள்

கூட்டங்களின் எண்ணிக்கை	2020 ஆண்டில் நடாத்தப்பட்ட கூட்டங்களின் எண்ணிக்கை
முகாமைத்துவ சபைகள்	06
கல்விசார் சபை	07
கணக்காய்வு முற்றும் முகாமைத்துவ குழுக்கள்	04
நூலக ஆலோசனை குழுக்கள்	01
நிதிசார் குழுக்கள்	03

12. ஆராய்ச்சி கருத்திட்டங்கள்

(அ) தொ.பொ.ப.பின் படிப்பு ஆராய்ச்சி துறைமூலம் நடாத்தப்பட்ட ஆராய்ச்சி செயற்பாடுகளின் முன்னேற்றம்

ஆராய்ச்சி நிகழ்ச்சித் திட்டத்தின் பெயர்	நிதியம்	ஆராய்ச்சியின் சுருக்க விவரணம்
சிரேட்ட பேராசிரியர் காமிணி அதிகாரி		
இலங்கையில் வரலாற்றுக்கு முந்திய மற்றும் வரலாற்றுக் காலப் பகுதியில் மானிட மற்றும் விலங்கின பகுதிகளை கற்கையிடல்	அரசாங்கத்தின் நிதியம்	இந்த ஆராய்ச்சியில் இலங்கையின் தொல்பொருளியல் வேலைதளங்களில் இருந்து கண்டுபிடிக்கும் மனித எலும்புகள் மற்றும் விலங்கின எச்சங்கள் தொடர்பாக கற்கை மேற்கொள்ளப்படும். இதன்போது தொல்பொருளியல் திணைக்களம், தேசிய அருங்காட்சியக திணைக்களம் மற்றும் தொல்பொருளியல் பட்டப் பின் படிப்பு நிறுவனம் (களனிய பல்கலைக்கழகம்) ஆகிய நிறுவனங்களில் வைக்கப்பட்டுள்ள மனித எலும்பு எச்சங்களுக்கு சிறப்பு கவனம் செலுத்தப்படும்.
சிரேட்ட பேராசிரியர் ஜகத் வீரசிங்க		
அருங்காட்சியகங்களில் உள்ள பொருட்களின் ஆயுட் காலம்	அரசாங்கத்தின் நிதியம்	அருங்காட்சியக பொருட்கள் மற்றும் அவற்றின் ஆயுட்கால வரலாறு
சிரேட்ட பேராசிரியர் ராஜ் சோமதேவ		
வேட்டையாடுபவர்களின் நிலைமாறு காலம் - கருத்திட்டம் 10	2020 ஆம் ஆண்டின் ஆராய்ச்சிகளின் பொருட்டு நிறுவனத்தால்	புத்துயிருழியின் ஈற்றயற்பகுதி சார்ந்த (ப்ளயிஸ்டோசீன Pleistocene epoch) பிந்திய சகாப்தத்தின் மனித இருப்புகள்

	எந்தவொரு நிதியமும் வழங்கப்படவில்லை. 2019 ஆம் ஆண்டில் திரட்டப்பட்ட பொருட்களின் பகுப்பாய்வு நடவடிக்கை-களை பூர்த்தி செய்யும் பொருட்டு தொல்பொருளியல் பட்டப் பின்படிப்பு நிறுவன-த்தால் ஆராய்ச்சி உதவியா-ளரை ஈடபடுத்தப்பட்டது.	மற்றும் அதன் தொடர்ச்சியுடனான பிரச்சினைகளள் பற்றி இவ்வாய்வின்போது கவனம் செலுத்தப்படுகிறது. தற்போது தொல்பொருளியலாளர்கள் மற்றும் இயற்பியல் மானுடவியலாளர்கள் ஆகியோரால் இடைக்கால மற்றும் ப்ளயிஸ்டோசீன சகாப்தத்தில் இலங்கையில் மானிடர்கள் வாழ்ந்தார்கள் என்று நிருபீத்துள்ளார்கள். எவ்வாறாயினும், உறுதியான வரலாற்று காலப் பகுதிக்குள் அவர்களின் தொடர்ச்சியான நிலைப்பாடு தொடர்பாக விஞ்ஞான முறையில் கேள்விக் குறியாக்கவில்லை. ஒருபுறம் இந்த ஆராய்ச்சி ப்ளயிஸ்டோசீன வேட்டைக்காரர்கள் ஹோலோசீன் காலநிலையின் மாற்றங்களின்மீது ஒழுங்கமைதல் முறை பற்றிய பிரச்சினைகளை ஆரயப்படுகிறது. அதன்போது ஹோலோசீன கடற் மட்டத்தில் மாற்றங்களால் தூண்டப்பட்ட சிறிய காலநிலை ஊசலாட்டங்களுக்கு சகிப்புத்தன்மையின் சிக்கலைத் தீர்க்கவும், மறுபுறம் இரும்பு யுகத்தின் ஆரம்பத்தில் இலங்கையில் ஹோலோசீன வேட்டைக்காரர்களின் தொழில்நுட்ப கலாச்சார பண்புகளின் தொடர்ச்சி பற்றிய பிரச்சினைக்கு பதில் அளிப்பதற்கும் முயற்சி எடுக்கப்படுகிறது. இதன்போது பொருட் எச்சங்களை சேகரிப்பதில் கவனம் செலுத்தப்பட்டது. இந்த தேவையை பூர்த்தி செய்வதற்கு 4 கட்டுப்படுத்தப்பட்ட அகழ்வாராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டன. நாட்டில் மலைப்பாங்கான பகுதிகளில் வசித்த மனித குழுக்களின் இடம் சார்ந்த அம்சங்கள் கவனத்தில் கொள்ளப்பட்டது.

கலாநிதி டி.ஆர்.பிரேமதிலக்க

பேலியோ தொண்மை சுற்றாடவியல் -விரைவான பொருளாதார அபிவிருத்தியின் முன்னே சமூக சுற்றாடல் இயக்கவியல் - மென் கிழக்கு இலங்கையில் உட்கட்டமைப்பு மற்றும் கரையோர மாற்றங்கள்	கொழும்பு பிரான்ஸ் தூதரக அலுவலகத்தின் அனுசரணை-யுடன் பிரான்ஸ் ஒத்துழைப்புடன் நிதியளிக்க-ப்படும் கருத்திட்டத்தின்கீழ் கிடைக்கப்பெற்ற மானியங்கள் மற்றும் பொண்டிச்சேரியில் பிரான்ஸ் நிறுவனம்/ தாவர-வியல், தொடர்பான ஆய்வு-கூடம் - இந்தியா	தொல்தொண்மை சுற்றாடவியல் ஆராய்ச்சி மற்றும் காலநிலை மாற்றங்கள் தொடர்பான அறிவு மற்றும் ஆற்றல்களின் பரிமாற்றத்தை மேம்படுத்தலும், உள்நாட்டு ஆற்றல்களை வலுப்படுத்துவதற்காக கருத்திட்டங்கள் திட்டமிடப்படுகின்றன. மேலும் கடலோர சுற்றாடல் மாற்றங்கள் மற்றும் சமூக சுற்றாடல் மாற்றங்களுக்கிடையிலான தொடர்பு அத்துடன் தெற்காசிய கடலோர வலயத்தில் (அம்பாந்தோட்டை தொடக்கம் மட்டக்களப்பு வரை) ஒருங்கிணைந்த முகாமைத்துவத்திற்-கிடையிலான தொடர்பு என்பவற்றை புரிந்துக்கொள்வதற்கு இலக்காகக் கொள்ளப்படுகிறது. இந்தக் கருத்திட்டம் ‘‘நீல பொருளாதார’’ அபிவிருத்தி கொள்கையின் கீழ் ஒத்துழைப்பு மற்றும் இந்து பசுபிக் வலயத்தின் விஞ்ஞான ஒத்துழைப்பின்கீழ் இயங்குகின்றது.
தெற்காசியாவின் நிலவமைப்பு மற்றும் நீர் நிலைகள், இடைக்கால இந்தியாவின் பருவமழை காலநிலை முரண்பாடுகள் மற்றும் சமூக இயக்கவியல் (இந்தயிாவின் மத்திய பிரதேஷ்)	பிரான்சின் CNRS பொண்டிச்சேரியில் பிரான்ஸ் நிறுவனம்/ தாவரவியல் ஆய்வகம் இந்தியா மற்றும் இயற்கை வரலாற்று அருங்காட்சியகம் மற்றும் பிரதான ஆராய்ச்சியாளர்-களுக்கிடையிலான நேரடி ஒத்துழைப்பு	இந்தியாவிலும் இலங்கையிலும் பருவமழை இன்று உலக வாழ் மக்கள் தொகையில் கால் பகுதியினரின் வாழ்க்கை முறைக்கு மையமாக உள்ளது. இந்த நிலைமையானது பரந்துபட்டதும் முக்கியமானதுமான சுற்றாடல் மற்றும் சமூக விளைவுகளை ஏற்படுத்துகின்றது. துணைக் கண்டத்தில் விவசாய உற்பத்திகள் மற்றும் அதனோடிணைந்த உணவு பாதுகாப்பு, மழை உரிய காலப் பகுதிக்கு கிடைக்கப்பெறல் மற்றும் போதியளவில் கிடைக்கப்பெறல் ஆகிய விடயங்களின் மீது தங்கியுள்ளது. இந்தக் கருத்திட்டம் மூலம் தெற்காசியாவின் கலாச்சார அபிவிருத்தியன் மீது பருவமழை தாக்கங்களை புரிந்துக்கொள்வதை

		இலக்காகக் கொள்ளப்படுகிறது.
தொல்பொருளியல் மற்றும் சுற்றாடல் மரபுரிமை	லயிசெஸ்டர் பல்கலைக்-கழகத்தின் கலாநிதி ரூத் யன்க் ஆகியோருக்கிடை-யிலான நேரடி ஒத்துழைப்பு	தொல்பொருளியல் மற்றும் சுற்றாடல் மரபுரிமை உபயோகப்படுத்தல் அதன் ஏற்புடைமை தொடர்பான சவால்களை நோக்குதல் பொருட்டான கலந்துரையாடலை மேம்டுத்துவதற்காக தொல்பொருளியல் மற்றும் மரபுரிமைக் தொடர்பான கல்வியாளர்கள், தொழில் வல்லுநர்கள், புதிய ஆராய்ச்சி-யாளர்கள், பட்டப்பின்படிப்பு மாணவர்கள், தன்னார்வ நிறுவனங்களின் பிரதிநிதியாளர்கள் மற்றும் சமூக குழுக்கள் ஆகியோரை ஒன்றிணைப்பதற்காக ஐக்கிய இராச்சியம் மற்றும் இலங்கை ஆகியவற்றுக்கிடையில் ஆராய்ச்சி வலையமைப்புகளை உருவாக்குதல் இக்கருத்-திட்டத்தின் மூலம் இலக்காகக் கொள்ளப்படுகிறது.
ப்ளயிஸ்டோசீன வரலாற்றுக்கு முந்திய அகழ்வாராய்ச்-சிகளின்மீது தொல்சுற்றாட-லியலான மகரந்தம், வித்திகள் நுண் தொல் எச்சம் தொடர்பாக புரிந்துக்கொள்ளுதல் மற்றும் தெற்காசியாவில் சன்திரயான்பலய (SEN) வேலைத் தளத்தில் ப்ளயீஸ்டோசீன மானிடர்கள் மற்றும் சுற்றாடல் தொல்பொருளியல் சூழல் முறைக் கட்டுப்பாடுகளை மேம்படுத்துதல்.	பொன்டிசேரியில் பிரான்ஸ் நிறுவனம் மற்றும் தாவரவியல் இந்தியாவில் ஷர்மா கல்வி நிறுவனத்திலிருந்து கிடைக்கப்பெறும் நேரடி நிதியம் கடந்த ஆண்டில் பணிகளை தொடர்ச்சியாக மேற்கொள்ளப்படுகிறது.	கருத்திட்டம் மூலம் தெற்காசியாவின் வரலாற்றுக்கு முன் மற்றும் சுற்றாடலை புரிந்துக்கொள்வதற்கு இலக்காகக் கொள்ளப்படுகிறது. இது பட்ட நிலை பின்படிப்பு மாணவர்களுடன் மேற்கொள்ளப்படுகின்ற கடந்த ஆண்டின் செயற்பாடுகளின் தொடர்ச்சியாகும்.

பாஹியன் கருத்திட்டம் - இலங்கையில் அரிசி மற்றும் வாழைச் செய்கையின் இனங்கள் மற்றும் தோற்றத்தி னை ஆய்வு செய்தல்.	இலங்கை ஆராய்ச்சி சபையின் நேரடி நிதியம் மற்றும் தொல்பொருளியல் பட்டப்பின்படிப்பு நிறுவனத்தின் பொதுவான ஒத்துழைப்பு. இதனை மாணவர்களுடன் கடந்த ஆண்டில் தொடர்ச்சியாக பேணப்பட்டது.	கருத்திட்டம் மூலம் முன்னரான வரலாறு மற்றும் கிளை வளங்களின் முகாமைத்துவம் புரிந்துக்கொள்வதற்கு இலக்காகக் கொள்ளப்படுகிறது. இது பட்ட நிலை பின்படிப்பு மாணவர்களுடன் மேற்கொள்ளப்படுகின்ற கடந்த ஆண்டின் செயற்பாடுகளின் தொடர்ச்சியாகும்.
நீர்கொழும்பு ஹம்பாந்தோட்டை மற்றும் மட்டக்களப்பு, களப்பின் வரலாற்றுக்கு பிந்திய இடைக்கால ஹொலசீன சுற்றாடல் மாற்றங்கள் மற்றும் ரிட்டிகல, அம்பாறை கற்பாறை தங்குமிடத்தின் வரலாற்றுக்கு முந்திய சூழல்.	இலங்கை ஆராய்ச்சி சபை மற்றும் இந்தியாவின் IFP நிறுவனத்தின் நேரடி நிதியம் இதனை மாணவர்களுடன் கடந்த ஆண்டில் தொடர்ச்சியாக பேணப்பட்டது.	இந்த கருத்திட்டம் மூலம் இலங்கையின் வரலாற்றுக்கு முன்னரான கரையோர சுற்றாடல் மாற்றங்கள் தொடர்பாக இலக்காகக் கொள்ளப்படுகிறது.
சிங்கராஜ வனத்தின் சுற்றாடல் மரபுரிமை – முற்காலத்தை புரிந்துக்கொள்ளும் பொருட்டு மகரந்த கற்கை தொல்மகரந்தத்தூள் அணுகுமுறை	இலங்கை ஆராய்ச்சி சபை மற்றும் இந்தியாவின் IFP நிறுவனத்தின் நேரடி நிதியம் இதனை மாணவர்களுடன் கடந்த ஆண்டில் தொடர்ச்சியாக பேணப்பட்டது.	மகரந்தத்தூள் விஞ்ஞான ஆராய்ச்சிகள் ஊடாக சிங்கராஜ வனத்தின் மரபுரிமைகள் தொடர்பாக ஆய்வு செய்தல் இக் கருத்திட்டத்தின் மூலம் இலக்காகக் கொள்ளப்படுகிறது.

காலாநிதி அர்ஜுன தன்திலகே		
கண்ணாடி மற்றும் மெருகூட்டல் - பழமையான இலங்கையில் கண்ணாடி உற்பத்தி மற்றும் பயன்படுத்தல். அத்துடன் மெருகூட்டல். (விரிவான ஒத்துழைப்பு ஆராய்ச்சி கருத்திட்டம்)	அரசாங்கத்தின் நிதியம்	இந்த ஆராய்ச்சி கருத்திட்டத்தின் முக்கியமான நோக்கம் யாதெனில், பழமையான இலங்கையில் கண்ணாடி உற்பத்தி மற்றும் மெருகூட்டல் தொடர்பாக விரிவான கற்கை மேற்கொள்ளுதலாகும். ஆகையால் கிரிபாவ என்ற கண்ணாடி உற்பத்தி வேலைத்தளம் தொடர்பாகவும் கிரிபாவின் பழமையான உள்நாட்டு கண்ணாடி உற்பத்தி மற்றும் மெருகூட்டலுக்காக பயன்படுத்தப்படும் பொருட்களை அடையாளம் காணுதலும், இலங்கையின் பழமையான கண்ணாடி உற்பத்திகளின் பொருட்டு பயன்படுத்துகின்ற தொழில்நுட்பத்தையும் புரிந்துக்கொள்வதன் மீது அடிப்படை கவனம் செலுத்தப்படுகிறது. நாட்டில் நிலவுகின்ற கோவிட் தொற்று நோய் நிலைமையின் மத்தியில் இவ்வாண்டில் இவ்வாராய்ச்சியினை மேற்கொள்வதற்கு இயலாதென்பதுடன், மேற்கொண்ட ஒரே பணி யாதெனில், உள்நாடு மற்றும் சர்வதேச ரீதியாக ஆராய்ச்சிகளுக்கு ஏற்புடையதாக வெளியிடப்பட்ட மற்றும் பெற்றுக்கொள்ள முடிந்த முக்கியமான கடிதங்களை கோவையிடப்பட்டது.
கலாநிதி ரோஸ் சோலங்காரச்சி		
மேல் மா ஓயா வின் Upper Ma Oya (UMO) குடியிருப்பு பரம்பலின் கற்கை	அரசாங்க நிதி	இந்தச் செயற்றிட்டத்தின் பிரதானமான சிந்தனையானது, சமூக சரித்திரத்திற்கு முற்பட்ட காலத்திலிருந்து பிந்திய சரித்திர காலம்வரை எல்லா அம்சங்களையும் கொண்டதாக காலக்கிரமமாக, அத்துடன் புவியியல் ரீதியாக நிலத்தோற்றத்தின் குடியிருப்புப் பரம்பலின் வடிவத்தினை ஆராய்வதனை அது உள்ளடக்கும் விதத்தினை அறிந்து கொள்வதாகும்.

இலங்கையின் பாதுகாப்பு தொல்பொருளியல்	சுய உருவாக்கல் நிதியம்	கண்டியிலுள்ள ஹட்டறலியட்ட துனுகும்புரவிலுள்ள நவீன வீதி அபிவிருத்தி செயற்றிட்டத்தினால், தொல்பொருளியல் பாரம்பரியம் அழிவடைய முன்பு ஒரு அவசர நடவடிக்கையாக இந்தச் செயற்றிட்டமானது நடாத்தப்பட்டது. கருத்திட்டத்தின் நோக்கம் யாதெனில் நிலத்தில் அழிவடைவதற்குள்ள எச்சங்கள் தொடர்பாக சரியான அறிக்கை தயாரித்தலாகும்.
கலாசார வளங்கள்/ மரபுரிமை முகாமைத்துவம் தொடர்பான முந்திட்டம். விலந்தகொட/விரந்தகொட தொல் பொருளியல் வேலைத்தளம் - கரவலகஸ்வெவ	சுய நிதியம்	வடமேல் மாகாணத்தில் குருணாகல் உள்ளூராட்சி திணைக்களத்திற்கு, தமது கலாச்சார மரபுரிமைகளை மேம்படுத்தும் பொருட்டான வேலைத்தளத்தின் நீண்டகால மரபுரிமை முகாமைத்துவ திட்டம் நடைமுறைப்படுத்துவதற்கு முன்னோடி கருத்திட்டம் தேவைப்பட்டதால் அந்தக் கோரிக்கையை கவனத்தில் கொண்டு இக் கருத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டது.
கலாநிதி.டீ.பீ.கம்லத்		
இலங்கையின் போதிகர கருத்திட்டம்	சுயமான நிதி	புனித போதி மரத்திற்கான யாத்திரையின் ஆரம்பமும் வளர்ச்சியும் மற்றும் அதன் கட்டிடக் கலை கூறுகளும்.
அநுராதபுரம் மகாவிகாரையின் ஆரம்பிக்கப்பட்ட உருவ வழிபாடு உருவாக்கப்பட்டது.	சுயமான நிதி	கி.முன்னர் 3 ஆவது நூற்றாண்டு தொடக்கம் கி.வருடம் 10 ஆவது நூற்றாண்டு வரை உருவ வழிபாடு தொடர்பாக சமய மற்றும் கட்டிடக் கலை கலப்பு கற்கை
புராண ரோகண இராசதானியின் பௌத்த ஆட்சிரமத்தின் ஆரம்பம் மற்றும் வளர்ச்சி தொடர்பான விடயங்கள	சுயமான நிதி	புராண ரோகன இராசதானி ஊடாக பாய்கின்ற ஐந்து நதிக் கரைகளுக்கிடையில் உருவாகிய ஆச்சிரமங்கள் - இதற்கு இலங்கையில் தெற்கு மற்றும் கிழக்கு மாகாணங்களுக்குரியதாகும்.

திரு.டி.எம்.ஆர்.ஏ.பண்டார		
யான் ஓயா மத்திய வடிநிலம் ஆராய்ச்சி செயற்றிட்டம் (YOMB) சீனா – இலங்கை கூட்டுத் தொல் பொருளியல் செயற்றிட்டம் 2017-2023 இப்பன்கட்டுவ மைலிதிக்க மயானபூமி அகழ்வு கருத்திட்டம்	அரசாங்க நிதி சிசுவான் பல்கலைக்கழகம் சீனா மத்திய கலாச்சார நிதியம்	யான்ஓயா மத்திய வடிநிலத்தின், இறுதி ஆண்டுகளின் அகழ்வுகளில் பின்னரான அகழ்வு பகுப்பாய்வு கடந்த ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட அகழ்வுகளின் பின்னரான அகழ்வுகளின் பகுப்பாய்வு. விசேடமாக பழமையான களிமண்னைக் கொண்டு தயாரிக்கப்பட்ட பகுப்பாய்வு. இறுதி அறிக்கையின் பொருட்டு பின்னரான அகழ்வு பொருட்களின் பகுப்பாய்வு
திரு. என்.பீ.ஆர்.நன்கந்துர		
கலையில் நவீனத்துவத்தின் தோற்றம் மற்றும் நவீன பெண் அகநிலை பற்றிய கலை வரலாற்று ஆராய்சி	அரசாங்க நிதி	கம்பளை, கொழும்பு, களுத்துறை, காலி, மாத்தறை மற்றும் அம்பாந்தோட்டை அடங்கலாக தெற்கு மற்றும் மேல் மாகாணங்களின் மாவட்டங்களில் தெரிவு செய்யப்பட்ட ஓவியங்களை அடிப்படையாகக்கொண்ட ஆராய்ச்சி 2020 ஆம் ஆண்டில் இந்தக் கரத்திட்டம் திம்பிரிகஸ்யாயவில் ஆசோகாராமய, திம்பிரிகஸ்யாயவில் இசிபத்தனாராமய போன்ற பன்சலைகளின்மீது கூடிய கவனம் செலுத்தப்பட்டுள்ளது.





(ஆ) தொ.பொ.ப.பின் படிப்பு கல்விசார் பணியாற் தொகுதிமூலம் நடாத்தப்பட்ட பயிலரங்குகள் மற்றும் கள சுற்றுலாக்கள்.

சிரேட்ட பேராசிரியர் காமிணி அதிகாரி			
பயிற்சிப்பட்டறையின் பெயர்	**காலம்**	**வளவாளர்கள்**	**பங்குபற்றுவோர்/இலக்கு வைக்கப்படும் குழு.**
மரபுரிமை முகாமைத்துவம் தொடர்பிலான பயிற்சி பட்டறை	28.02.2020	கலாநிதி காமிணி விஜேசூரிய	தொல் பொருளியல் தொடர்பான் நிறுவனத்தின் மாணவர்கள், இலங்கை தொல் பொருளியல் சபையின் உறுப்பினரகள் மற்றும் தொல் பொருளியல் திணைக்களம்
விலங்கினங்களின் நடத்தை மற்றும் எலும்புகள் தொடர்பான பயிற்சி பட்டறை – தேசிய மிருககாட்சிசாலை	21.08.2020		தொல் பொருளியல் பட்டப் பின் படிப்பு நிறுவனத்தின் மாணவர்கள் பேலியோ உயிரியல் பல்வகைத்தன்மை டிப்ளோமா
விலங்கினங்களின் நடத்தை மற்றும் எலும்புகள் தொடர்பான பயிற்சி பட்டறை – தேசிய மிருககாட்சிசாலை	05.09.2020		தொல் பொருளியல் பட்டப் பின் படிப்பு நிறுவனத்தின் மாணவர்கள் விலங்கியல் தொல்பொருளியல் தொடர்பான டிப்ளோமா

கலாநிதி. டீ. ஆர்.பிரேமதிலக்க			
பயிற்சிப்பட்டறையின் பெயர்	**காலம்**	**வளவாளர்கள்**	**பங்குபற்றுவோர்/இலக்கு வைக்கப்படும் குழு.**
இந்தியாவின் பேலியோலித்திக்க வேலைத்தளத்தின் ஆராய்ச்சி அகழ்வுகளின் கள மாதிரிகள்	மார்ச் 15 – 20	பணிப்பாளர் - ஆராய்ச்சி ஷர்மா நிலையத்தின் மரபுரிமை கற்கை கேந்திரம், இந்தியா மற்றும் இந்தியா-வின் பொண்டிச்-சேரியில் பிரான்ஸ் நிறுவனத்தின் மகரந்த ஆய்வு-கூடத்தின் பணியாற்-தொகுதி, சத்துர் ஆராய்ச்சிகளுக்கான சர்வதேச சங்கத்தின் உறுப்பினர்கள்	பல்கலைக்கழகத்தின் அறிஞர்கள், ஆராய்ச்சியாளர்கள் மற்றும் தெற்காசியாவின் பட்டநிலைப் பின் படிப்பை கற்கும் மாணவர்கள்
மன்டு கருத்திட்டம் - இந்தியா	மார்ச் 29 – 30	இந்தியாவில் உள்ள மன்டு உறுப்பினர்கள் , பிரான்ஸ் மற்றும் ஐக்கிய இராச்சியம்	பல்கலைக்கழகத்தின் அறிஞர்கள், ஆராய்ச்சியாளர்கள்
சத்தூர் ஆராய்ச்சி பொருட்டு சர்வதேச சங்கம் HaBCom மூலம் மேற்கொண்ட பயிற்சி பட்டறை	ஏப்ரல 12-15	இந்தியாவின் பொண்டிச்சேரியில் பிரான்ஸ் நிறுவனத்தின் மகரந்த ஆய்வு-கூடத்தின் பணியாற்-தொகுதி, சத்துர் ஆராய்ச்சிகளுக்கான சர்வதேச சங்கத்தின் உறுப்பினர்கள்	பல்கலைக்கழகத்தின் அறிஞர்கள் மற்றும் ஆராய்ச்சியாளர்கள்

சத்தூர் ஆராய்ச்சி பொருட்டு சர்வதேச சங்கம் HaBCom மூலம் மேற்கொண்ட கூட்டம் (meeting)	செப்தெம்பர் 11	இந்தியாவின் பொண்டிச்சேரியில் பிரான்ஸ் நிறுவனத்தின் மகரந்த ஆய்வு-கூடத்தின் பணியாற்-தொகுதி, சத்துர் ஆராய்ச்சிகளுக்கான சர்வதேச சங்கத்தின் உறுப்பினர்கள்	பல்கலைக்கழகத்தின் அறிஞர்கள் மற்றும் ஆராய்ச்சியாளர்கள்
கலாநிதி ரோஸ் சோலங்காரச்சி			
பயிற்சிப்பட்டறையின் பெயர்	**காலம்**	**வளவாளர்கள்**	**பங்குபற்றுவோர்/இலக்கு வைக்கப்படும் குழு.**
தொல் பொருளியல் மற்பாண்டங்கள் பகுப்பாய்வு செயல்முறை விளக்கம்/ மாதிரி அகழ்வு	பெப்ருவரி 16 யூலை 15	சுய பங்களிப்பு சுய பங்களிப்பு	விஞ்ஞான முதுமாணி, கலை முதுமாணி கற்பவர்கள்(தொல் பொருளியல் திணைக்களம் மற்றும் மத்திய கலாச்சார நிதியத்தின் தொல் பொருளியல் தொடர்பான தொழில் நெறிஞர்கள் அடங்கலாக) விஞ்ஞான முதுமாணி, கலை முதுமாணி கற்பவர்கள்(தொல் பொருளியல் திணைக்களம் மற்றும் மத்திய கலாச்சார நிதியத்தின் தொல் பொருளியல் தொடர்பான தொழில் நெறிஞர்கள் அங்கலாக)

சிரேட்ட பேராசிரியர் காமினி அதிகாரி		
களச் சுற்றுப்பயணத்தின் நோக்கம்/நோக்கங்கள்	**காலம்/திகதிகள்**	**பங்குபற்றுவோர்/இலக்கு வைக்கப்படும் குழு.**
நகல்ஸ் மலைத் தொடர் பகுதி உயிரியல் பல்வகைத் தன்மை மற்றும் வரலாற்றுக்கு முன்னரான கற் கருவி ஆயுதங்கள் தொடர்பான ஆய்வு இயற்கை மற்றும் கலாச்சாரம் பல்வகைத்தன்மை ஆய்வு பொலன்னருவை	2020/06/25 2020/09/26 -28	தொல் பொருளியல் பட்டப் பின் படிப்பு நிறுவனத்தின் மாணவர்கள், தொல் பொருளியல் டிப்ளோமா மற்றும் பல்லுயிரியல் பன்முகத்தன்மை டிப்ளோமா தொல் பொருளியல் பட்டப் பின் படிப்பு நிறுவனத்தின் மாணவர்கள், தொல் பொருளியல் டிப்ளோமா மற்றும் பல்லுயிரியல் பன்முகத்தன்மை டிப்ளோமா
சிரேட்ட பேராசிரியர் ராஜ் சோமதேவ		
களச் சுற்றுப்பயணத்தின் நோக்கங்கள்	**காலம்/திகதிகள்**	**பங்குபற்றுவோர்/இலக்கு வைக்கப்படும் குழு.**
பலன்கொட படஹேன கற்குகையின் தொல் பொருளியல் அகழ்வு	30 நாட்கள்	பட்ட நிலை பின்படிப்பு கற்கை ம மற்றும் ஆராய்ச்சி உதவியாளர்
மொணராகலை மாவட்டத்தில் தொல் பொருளியல் ஆய்வு நடாத்தப்பட்டது.	30 நாட்கள்	பட்ட நிலை பின்படிப்பு கற்கை மாணவர்கள் மற்றும் ஆராய்ச்சி உதவியாளர்
திருகோணமலை மாவட்டத்தில் புல்மோட்டை பிரதேசத்தில் தொல்பொருளியல் ஆய்வு நடாத்தப்பட்டது.	07 நாட்கள்	பட்ட நிலை பின்படிப்பு கற்கை மாணவர்கள் மற்றும் ஆராய்ச்சி உதவியாளர்
மட்டக்களப்பு மாவட்டத்தில் தொப்பிகல பிரதேசத்தில் கள சுற்றுலா மேற்கொள்ளப்பட்டது.	04 நாட்கள்	பட்ட நிலை பின்படிப்பு கற்கை மாணவர்கள் மற்றும் ஆராய்ச்சி உதவியாளர்
கலாநிதி டி. ஆர் பிரேமதிலக்க		
களச் சுற்றுப்பயணத்தின் நோக்கங்கள்	**காலம்/திகதிகள்**	**பங்குபற்றுவோர்/இலக்கு வைக்கப்படும் குழு.**
இந்தியாவின் மத்திய பிரதேசங்களுக்கு மேற்கொண்ட களச் சுற்றுலாக்கள் 1. மத்திய இந்தியாவில் நில வடிவமைப்புகள் மற்றும் நீர் காட்சிகளை புரிந்துக்கொள்ளுதல்	பெப்ருவரி 23 -28	இந்தியாவில் ஐ.எப்.பீ.நிறுவனத்தின் மகரந்த ஆய்வு கூடத்தின் பட்டநிலை பின்படிப்பு மாணவர்கள், பணியாற்தொகுதி உறுப்பினர்கள், இந்தியாவில் ஐ எப் பீ

2. மத்திய இந்தியாவில் பழைமையான குளங்களிலிருந்து வண்டல் மண் பகுதிகளை சேர்த்தல் இந்தியாவின் DEN வரலாற்றுக்கு முன்னரான அகழ்வு நிலங்களில் மாதிரிகளை சேர்க்கப்படுதல்	மார்ச் 15 - 20	நிறுவனத்தின் சமூகவியல் கற்கை பிரிவின் ஆராய்ச்சியாளர்கள் ஆகியோருடன் பிரான்ஸ், ஐக்கிய இராச்சியம் மற்றும் ஜேர்மனியின் நில மற்றும் நீரியல் நிறுவனங்களின் சிரேட்ட ஆராய்ச்சியாளர்கள் இந்தியாவில் ஐ.எப்.பீ.நிறுவனத்தின் மகரந்த ஆய்வு கூடத்தின் பணியாற்தொகுதி உறுப்பினர்கள், ஷர்மா மரபுரிமை நிலையத்தின் ஆராய்ச்சியாளர்கள் மற்றும் பட்டநிலை பின் படிப்பு மாணவர்கள், தென் இந்திய பல்கலைக்கழகத்தின் தொல்பொருளியல் கற்கை பிரிவின் கலைமுதுமாணி பட்டப்படிப்பு மாணவர்கள் மற்றும் பெங்களூர் டேடின் ஆய்வுகூடத்தின் விஞ்ஞானிகள்
கலாநிதி ரோஸ் சோலங்காரச்சி		
களச் சுற்றுப்பயணத்தின் நோக்கங்கள்	**காலம்/திகதிகள்**	**பங்குபற்றுவோர்/இலக்கு வைக்கப்படும் குழு.**
சீகிரி – தம்புலு பகுதி – கிரிஒய வடிநிலம் (1) கிரிஒய வடிநிலத்தில் புதிதாக கண்டுபிடிக்கப்பட்ட கடிதங்கள் தொடர்பான மீள்பரிசோதனை (2) குடியிருப்புடன் எழுத்துக்கள் மற்றும் அதன் தொடர்பு பரவலாகிய முறை தொடர்பாக அடையாளம் காணுதல் (4) நிலவடிவமைப்புகள் மீது காணக்கூடியதாக இருந்த அரசியல் அதிகாரத்துவத்தை அடையாளம் காணுதல் (5)	ஆகஸ்ட் 15	விஞ்ஞான முதுமாணி பட்டப் படிப்பு மாணவர்கள்,

திரு.என்.பீ.ஆர்நன்கந்துர		
களச் சுற்றுப்பயணத்தின் நோக்கங்கள்	**களச் சுற்றுப்பயணத்தின் நோக்கங்கள்**	**களச் சுற்றுப்பயணத்தின் நோக்கங்கள்**
கொழும்பு 05 இசிபத்தனாராமை மற்றும் அசோகாராமை போன்ற விகாரை நிலையங்களில் 20 ஆவது நூற்றாண்டின் ஆரம்ப கட்டத்தில் பௌத்த ஓவியங்கள் தொடர்பான அனுபவங்களை பெற்றுக்கொள்ளுதல்.	1 நாள்	கலை வரலாறு தொடர்பான பட்டநிலை பின்படிப்பு டிப்ளோமா மாணவர்கள்
தம்புள்ள ரஜமகா விகாரையின் பௌத்த ஓவியங்கள் தொடர்பான அனுபவங்களை பெற்றுக்கொள்ளுதல்.	1 நாள்	தொல்பொருளியல் தொடர்பான பட்டநிலை பின்படிப்பு டிப்ளோமா மாணவர்கள்
